மே 28, 2015

## ஸ்மிருத்தி அல்லது நினைவு செய்ய வேண்டியது

இனிமையான குழந்தாய், உடல் உணர்வு கூட ஆணவத்தின் ஒரு மிக வலுவான வடிவமாகும். நீங்கள் உங்களை ஆத்மாக்கள் என்று கருதும்போது, தந்தையிடம் அதிகமான அன்பு இருக்க முடியும். உங்களைக் கேளுங்கள்: உடல் உணர்வின் ஆணவத்தில் வருவதன் மூலம் ஒரு முள்ளாக ஆகின்றேனா? நீங்கள் ஆத்மாக்கள் என்பதை மறந்ததினால், நீங்கள் தந்தையை மறந்துவிட்டீர்கள். நம்முடைய பாபா இங்கே இருக்கின்றார். அவர் குழந்தைகளாகிய உங்களை அவருக்கு சொந்தம் ஆக்கிக்கொள்கின்றார். இது கூட உங்களின் பெரிய பாக்கியம் ஆகும். நாம் இப்போது தந்தையுடன் வீட்டிற்குத் திரும்பி செல்ல வேண்டும். எனவே, நாம் வீட்டை நினைவில் கொள்ள வேண்டும்.

இனிமையான பாபா, நாள்பொழுதில் நான் உங்களுடன் வீடு திரும்ப வேண்டும் என்ற விழிப்புணர்வை மீண்டும் உறுதி செய்துகொள்வேன் . நான் இந்த உலகிற்கு உடலில்லாமல் வந்தேன், மேலும் நான் உடலற்று திரும்ப வேண்டும். எனவே, நான் ஏன் எந்த சரீரதாரிகளை நினைவு செய்ய வேண்டும்? பாபா, எனக்கு உங்கள் மீது அதிகமான அன்பு இருக்கின்றது. நான் ஒரு உடலற்ற ஆத்மா. நீங்கள் என் இனிய, அன்பான பாபா. நீங்கள் என்னை உங்களுக்கு சொந்தமாக்கி கொள்ள தனிப்பட்ட முறையில் வந்திருக்கின்றீர்கள். நான் மிகவும் அதிர்ஷ்டசாலியாக உணர்கின்றேன்.

## சமார்த்தி அல்லது சக்தி

நான் தொடர்ந்தும் மேலே கொடுக்கப்பட்டிருக்கும் ஸ்மிருத்தியிலிருந்து பெறப்படும் சக்தியின் இணைப்பில் என்னை நான் வைத்திருக்கின்றேன். என்னுடைய ஸ்மிருத்தி எனக்கு எவ்வாறு என்னுடைய சுய-மரியாதையை மீண்டும் ஆற்றல் மிக்கதாகச் செய்கின்றது என்பதைப் பற்றி நான் விழிப்படைகின்றேன். என்னுடைய ஸ்மிருத்தி எவ்வாறு எனக்குப் பலமளிக்கின்றது, மேலும் எப்போதும் மாறிக்கொண்டிருக்கும் உலகில், சீரான மனநிலையோடும் பொறுமையுடனும் செயல்பட என்னை அனுமதிக்கின்றது என்பதிலும் நான் கவனம் செலுத்துகின்றேன்.

## மனோ-விருத்தி அல்லது மனோபாவம்

பாபா ஆத்மாவிற்கு: இது ஒரு நிச்சயிக்கப்பட்ட நாடகம், அதிலிருந்து ஒருவரும் விடுவிக்கப்பட முடியாது. நீங்கள் என்ன பார்த்தாலும், உதாரணமாக, ஒரு கொசு பறக்கிறது, அது ஒரு சக்கரத்திற்கு பிறகு அதே முறையில் பறக்கும். இந்த புரிந்து கொள்ள ஒரு நல்ல புத்தி வேண்டும். இந்த நாடகத்தின் படப்பிடிப்பு தொடர்ந்தும் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றது. இது கர்மச்சேத்திரம் ஆகும். நீங்கள் பரந்தாமத்திலிருந்து உங்கள் பாகங்களை நடிப்பதற்காக இங்கு வந்துள்ளீர்கள்.

நான் பற்றற்று விலகியிருக்கும் மனப்பான்மையை மேற்கொள்வதில் உறுதியாக இருக்கிறேன். நான் இந்தப் படத்தின் எல்லையற்ற படப்பிடிப்பை விருப்பமின்மை என்னும் மனப்பான்மையோடு பார்த்துக் கொண்டிருக்கின்றேன். இந்த உடல் என்னுடைய ஆடை என்பதையும் இதை பாபா எனக்கு கடனாக கொடுத்திருக்கின்றார் என்பதையும் நான் நினைவில் வைத்திருக்கின்றேன். பாபா இந்தப் பழைய ஆடைகளை வலிமையால் நிரப்பி உலகம் முழுவதும் சேவை செய்ய மேம்படுத்துகின்றார். அது தந்தையின் பொறுப்பு, என்னுடையது அல்ல. எல்லோரையும் செயல்படவைக்கும் ஒரு இயக்குனர், என்னையும் செயல்படவைக்கின்றார். இந்த உணர்வு இந்த கர்மச்சேத்திரத்தில் என்னுடைய கதாப்பாத்திரத்தை நடிக்கும் சமயத்தில் எல்லையற்ற விலகியிருக்கும் மனோபாவத்தை வளர்த்துக்கொள்ள உதவுகின்றது.

## திருஷ்டி அல்லது தூய பார்வை

பாபா ஆத்மாவிற்கு: தந்தையிடமிருந்து தந்தையை தெரிந்துகொண்டதனால் தான் உங்களால் தந்தையின் ஆஸ்தியைப் பெறமுடிகின்றது. அனைவரும் எல்லையற்ற தந்தையிடமிருந்து தனது ஆஸ்தியைப் பெறுகின்றார்கள். தனது ஆஸ்தியைப் பெறாத ஒரு ஆத்மா கூட இல்லை.

ஒவ்வொரு ஆத்மாவும் என்னுடைய சகோதரர். எல்லோரும் பாபாவிடமிருந்து ஆஸ்தியைப் பெறுகின்றார்கள். இன்று என்னுடைய திருஷ்டியில், நான் பாபாவிடமிருந்து என்னுடைய ஆஸ்தியைப் பெற்றுக்கொள்கின்றேன் வேறு யாரிடமிருந்தும் இல்லை என்பதை வைத்திருப்பேன்.

## ஓர் அலையை உருவாக்குதல்

நான் மாலை 7:00 மணி முதல் 7:30 மணி வரை தியானத்தின் போது முழு உலகையும் தூய நினைவு மற்றும் மனோபாவத்தினால் நிரப்பும் ஓர் அழகான அலையை உருவாக்கும் மன்சா சேவையைச் செய்வேன். நான் மேலே கொடுக்கப்பட்டிருக்கும் ஸ்மிருத்தி, மனோ-விருத்தி, மற்றும் திருஷ்டியின் மூலம், முழு உலகிற்கும் சாக்காஷ் கொடுப்பதிலும் ஒரு கருவியாக என்னை ஈடுபடுத்திக்கொள்வேன்.